**தலைப்பு 018 – பாராளுமன்றத்தின் அரசாங்க முதற்கோலாசான் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 018 – பாராளுமன்றத்தின் அரசாங்க முதற்கோலாசான் அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று 009 இன் படி உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அரசாங்க முதற்கோலாசான் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூன் 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பாராளுமன்றத்தின் அரசாங்க முதற்கோலாசான் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

#### 2.1.1 ஏற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க முடிந்த அளவு முழுமையாக சரியாக, சிக்கனம் மற்றும் வினைத்திறனுடன் உரிய கவனத்துடன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் விஷேடமாக பொறுப்பாக இருக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு மீண்டுவரும் 02 செலவு விடயங்களில் முறையே ரூபா 275,967 தொகை மற்றும் ரூபா 1,542,614 தொகை என 69 மற்றும் 77 சதவீதங்கள் என சேமிக்கப்பட்டுள்ளது. | 02 மீண்டுவரும் செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்படுவதற்கான காரணம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்டவாறு வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் தனிப்பட்ட பதவியணியினரின் பிரயாணச் செலவு வரையறுக்கப்பட்டமையால் செலவுகள் குறைவடைந்திருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செலவு மதிப்பீடுகள் சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆரம்ப மதிப்பீடுகள் தயாரிக்கும் போது மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதனால் 04 மீண்டுவரும் செலவுகளில் ரூபா 43,000,000 இற்கான மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,700,000 இற்கான ஏற்பாடுகள் நி.பி. 66 இன் மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதும், வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அந்த செலவு விடயத்தின் தேறிய ஏற்பாடுகள் 18 சதவீதத்திற்கும் 62 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டது. | அலுவலகங்களுக்கு வெளியிலுள்ள கடமைகள் அலுவலகங்களிலிருந்தே முகாமைத்துவம் செய்தல், மின்னஞ்சள் பாவனையின் மூலம் கடிதங்கள் மற்றும் செய்திகள் அனுப்புதல், நிகழ்வு நிலையின் மூலம் கலந்துரையாடல்கள் நடாத்துதல், கடமை வாகனம் ஒதுக்கப்பட்டிருந்த தனிப்பட்ட பதவியணி உத்தியோகத்தர்கள் மற்றும் நிரந்தர பதவியணி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் ஏற்படல் மற்றும் தேக்க வாகனங்களின் பாவனை குறைவடைதல், அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள் குறைவடைதல் மற்றும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்ட அமைச்சுக்களின் மூலம் உணவு பானங்களுக்கான செலவு மேற்கொள்ள ஏற்பாடு செய்தல் ஆகிய காரணங்களால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | செலவுகள் சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் பராமரிப்புச் செலவுக்கான மதிப்பீட்டு ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 233 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டு ஏற்பாடுகளில் ரூபா 845,336 தொகை எனப்படும் 85 சதவீதத்தினால் சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டிற்காக கூடிய எண்ணிக்கையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இயந்திர உபகரணங்கள் பயன்பாடு குறைவடைந்திருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் இயந்திர உபகரண பராமரிப்பு அலுவல்களுக்கான செலவுகள் ஏற்படவில்லை. | செலவுகள் சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமைகள்** | | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | | |
| (அ) நிதிப் பிரமாணம் 231 | 200,712 | வேறு பதிவேடுகள் இன்றி சரி பார்ப்பதற்கு இயலுமான வகையில் அனைத்து தகவல்களும் உரிய உறுதிச் சீட்டுக்களில் அடங்க வேண்டியிருந்த போதிலும், தற்காலிக சாரதிகள் இருவருக்கு செலுத்தியிருந்த 03 மாத சம்பளத்திற்காக தின வரவை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இணைத்திருக்கவில்லை. | அலுவலகத்தின் மூலம் தற்காலிக சாரதியொருவர் என செலுத்தப்படும் சம்பளம் மற்றும் படி மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டது. அங்கு தின வரவு ஒட்ட அட்டவணையின் மூலம் சான்றுபடுத்தப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 232(2) | 852,506 | உறுதிச்சீட்டிற்கு அல்லது பொழிப்பில் அடங்கும் தொகை இலக்கத்தில் போலவே எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் 09 உறுதிச் சீட்டுக்கள் தொடர்பான சம்பள விபரங்களில் செலுத்தப்பட்ட தொகை எழுத்தினால் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்ட தொகை தவறுதலாக எழுத்தின் மூலம் குறிப்பிட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்திக்கு இணங்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது மற்றும் அதனை செயற்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கப்பட வேண்டிய வருடாந்த பெறுகைத் திட்டம் வழிகாட்டல் கோவை இலக்கம் 13 இல் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள வருடாந்த பெறுகைத் திட்டம் காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இனிமேல் 2024 பெறுகைத் திட்டத்தில் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்துக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக வழிகாட்டல் 12 இன் படி குறிப்பிட்ட ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாக கொண்டு முக்கியத்துவ அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், செயற்படுத்தப்படும் கால சட்டகம் மற்றும் அந்த தொழிற்பாடுகளில் எதிர்பார்த்த வெளியீடுகள் ஒவ்வொரு மாதத்திற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தினால் காலாண்டு அடிப்படையில் அது தயாரிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு முதல் குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையில் அடங்கியுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 45 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 42 ஆக காணப்பட்டமையால் வெற்றிடப் பதவியணி 03 காணப்பட்டது. அதில் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர் இருவரும் அடங்கும். | இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக உரிய நடவடிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிறுவனத்தின் செயலாற்றுகையை பாதிக்கக்கூடிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |